# எஸ்றா, நெகேமியா, எஸ்தர்

## பெயர்களும் சில தகவல்களும்

## எஸ்றா

- "எஸ்றா" என்ற பெயரின் பொருள், "தேவனின் உதவி"
- இந்தப் புத்தகத்தை எழுதியவர்: எஸ்றா
- எழுதப்பட்ட காலம் கிமு 457-444
- அதிகாரங்கள்: 10 வசனங்கள்: 280

## நெகேமியா

- "நெகேமியா" என்ற பெயரின் பொருள், "தேவனின் ஆறுதல்"
- இந்தப் புத்தகத்தை எழுதியவர்: நெகேமியா
- எழுதப்பட்ட காலம் கிமு 425
- அதிகாரங்கள்: 13 வசனங்கள்: 406

## எஸ்தர்

- "எஸ்தர்" என்ற பெர்சிய பெயரின் பொருள், """நட்சத்திரம்

- அத்சாள் என்ற எபிரேய பெயரின் பொருள்
- இந்தப் புத்தகத்தை எழுதியவர்: யாரென்று அறியப்படவில்லை
- எழுதப்பட்ட காலம் கிமு 464435
- அதிகாரங்கள்: 10 வசனங்கள்: 167

## CHARACTER BACKGROUND

## எஸ்றா யார்?

- எஸ்றா-ஆசாரியன்
- அதி 7 ஆசாரிய வம்ச அட்டவணை
- எஸ்றா-வேதபாரகன்
- வேதாகம சுருள்களை பிரதியெடுப்பவன்
- எஸ்றா -ஆசிரியன்
- எஸ்றா - பெரிய ஜெபாலய நிறுவனர்
- வேத புத்தகங்களை தொகுத்தவன்

## நெகேமியா யார்?

- நெகேமியா, பெர்சிய ராஜாவாகிய அர்தசஷ்டாவின் பானபாத்திரக்காரன்

- நெகேமியா எருசலேமின் அலங்கங்களை கட்டியவன்
- 52 நாட்களில் கட்டியவன்

## எஸ்தர் யார்?

- எஸ்தர் தாயும் தந்தையுமில்லாமல் வளர்ந்த ஒரு யூத அனாதை இளம் பெண் (2:7)
- சூசா என்னும் அருமையான தலைநகர் பட்டணத்தில் பிறந்து வளர்ந்தவள்(2:5)

# இஸ்ரவேல், யூதா என்னும் இரண்டு இராஜ்யங்கள்

சவுல் (40 years)
தாவீது (40 years)
சாலொமோன் (40 years)
வட ராஜ்யம் (210 Years)
தென் ராஜ்யம் (345 Years)

இஸ்ரவேலர் ராஜாக்களின் அளுகையின் கீழிருந்த காலம் 467 ஆண்டுகள்

இஸ்ரவேலர் ராஜாக்களின் அளுகையின் கீழிருந்த காலம் 467 ஆண்டுகள் (கிமு 1053-586) யூதாவின் சிறையிருப்பின் காலம் எரேமியாவின் தீர்க்கதரிசனத்தின்படியே 70 ஆண்டுகள் (எரே 25:8-11)

கிமு 539ல் பேரரசனான கோரேஸ் பாபிலோனிய பேரரசை வீழ்த்திய பின்பு சிறையிருப்பிலிருந்த யூதர்களை யூதேயாவுக்கு திரும்பிச்செல்ல அனுமதித்தான்.

அசீரியர்களின் கொள்கை: பிடிக்கப்பட்ட தேசத்தின் மக்களை அங்கிருந்து அகற்றி வேறு மக்களை அதிலே குடியேற்றுவது.

பாபிலோனியர்களின் கொள்கை: பிடிக்கப்பட்ட தேசத்தின் மக்களை அடிமைகளாகவும் வேலையாட்களாகவும் மாற்றுவது.

மேதிய-பெரிசியர்களின் கொள்கை: பிடிக்கப்பட்ட தேசத்தின் மக்களை அந்த தேசத்திலேயே வைத்திருந்து அவர்கள் மனங்களை வெல்வது.

## எஸ்றாவின் புத்தகம் - வரலாற்றில் இந்தப் புத்தகத்தின் இடம்

யூதாவின் வீட்டாரை எழுபது ஆண்டுகள் கழித்து பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பக் கொண்டுவருவேன் என்கிற தமது வார்த்தையை தேவன் நிறைவேற்றுகிறார். இது "இரண்டாம் யாத்திரையாகமம்" என்ற விஷேசபெயரிலும் அழைக்கப்படுகிறது.

### மூன்று பாபிலோனிய நாடுகடத்தல் பயணங்கள்

***1-வது நாடுகடத்தல்:**

கிமு 605ல் யோயாக்கீம் ராஜாவின் ஆட்சிக்காலத்தில் (2இரா 23:34-24:6) இதிலே தானியேல் உள்ளிட்ட பல பிரபுக்கள் குலமானவர்கள் சிறைப்பட்டுச் சென்றார்கள்.

*__2-வது நாடுகடத்தல்:__

கிமு 597ல் யோயாக்கீன் ராஜாவின் ஆட்சிக்காலத்தில் (2இரா 24:6-16) இதிலே மத்திய வகுப்பாரும், தொழில் வல்லுனர்களும், மீதியிருந்த உயர் மட்டத்தினரும் சிறைப்பட்டுச் சென்றார்கள். தேவாலயத்தின் பொக்கிஷங்களும் எடுத்துச் செல்லப்பட்டன.

***3-**வது நாடுகடத்தல்:

கிமு 586ல் சிதேக்கியா ராஜாவின் ஆட்சிக்காலத்தில் (2இரா 24:17-25;21) இதிலே எருசலேம் நகரமும், ஆலயமும் எரிக்கப்பட்டு சிதிலமாக்கப்பட்டதோடு மீதியாய் இருந்தவர்களும் சிறைப்பட்டுச் சென்றார்கள்.

## மூன்று பாபிலோனிலிருந்து நாடுதிரும்பும் பயணங்கள்

***1**வது நாடு திரும்புதல்:

செருபாபேலின் தலைமையில் (அதி 1-6)

50000த்திற்கு குறைவான ஜனங்களே நாடுதிரும்பினார்கள்

ஆலயத்தின் வேலையை ஆரம்பித்து அஸ்திபாரம் போட்டார்கள்

சில ஆண்டுகள் கழித்து வேலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டது.

***2**வது நாடு திரும்புதல்:

எஸ்றாவின் தலைமையில் (அதி 7-10)

1700 பேர் மாத்திரமே நாடுதிரும்பினார்கள்

ஆசாரியர்கள் நாடுதிரும்பியதால் மீண்டும் நியாயப்பிரமாணம் கற்பிக்கப்பட்டு பின்பற்றப்பட்டது.

***3**வது நாடு திரும்புதல்:

நெகேமியாவின் தலைமையில்

எருசலேமின் மதில்கள் கட்டப்பட்டு அரசாங்கம் திரும்ப நிறுவப்பட்டது நெகேமியா பன்னிரண்டு ஆண்டுகள் அளுனராக பதவிவகித்தான்.

எஸ்றாவின் தலைமையில் திரும்பிய 13 ஆண்டுகளுக்கு பின்பும், செருபாபேலின் தலைமையில் திரும்பிய சுமார் 94 ஆண்டுகளுக்கு பின்பும் நெகேமியாவின் தலைமையில் நாடுதிரும்பியது நடைபெற்றது.

எஸ்றாவின் புத்தகத்தின் 6வது, 7வது அதிகாரங்களுக்கிடையில் எஸ்தரின் சரித்திரம் பொருந்துகிறது.

எஸ்தரின் சம்பவங்கள். அந்த அதிகாரங்களுக்கிடையிலான 58 ஆண்டுகளில் 10 ஆண்டுகளில் நடந்தது.

எஸ்றாவின் தலைமையில் திரும்பிய காலத்திற்கும் செருபாபேலின் தலைமையில் திரும்பிய காலத்திற்கும் இடைப்பட்ட காலம்.

எஸ்தரின் சரித்திரம், யூதேயாவிற்குத் திரும்பி வராமல் பெர்சியாவிலேயே தங்கிவிட்ட பெரும்பான்மையான யூதர்களின் நிலையை சித்தரிக்கும் ஒரே வேதாகம புத்தகம்.

## நான்கு முக்கிய ராஜாக்கள்

### கோரேஸ் :

பாபிலோனிய பேரரசை கைப்பற்றியவன் கிமு 538

யூதர்கள் தாயகம் திரும்பவும் எருசலேமில் பாபிலோனியர்களால் கிமு 587ல் அழிக்கப்பட்ட ஆலயத்தை மீண்டும் கட்டவும் அனுமதியளித்தான்.

. 1ம் அர்தசஷ்டா கிமு465-424 வரையிலும், 2ம் தரியு கிமு423-404 வரையிலும் ஆண்டார்கள்.

### பெரிய தரியு:

இவனது காலத்தில்தான் எருசலேமின் ஆலயம் மீண்டும் கட்டப்பட்டது.

அதிகாரங்கள் 6க்கும் 7க்கும் இடைப்பட்ட காலம் 60 ஆண்டுகள்

இந்த காலப்பகுதியில்தான் எஸ்தர் பெர்சியாவில் வாழ்ந்ததும் ஆண்டதுமான எஸ்தரின் சரித்திரத்தில் விபரிக்கப்பட்ட சம்பவங்கள் நடந்த காலம்.

### செரக்சீஸ்:

எஸ்தரின் சரித்திரத்தில் இவன் அகாஸ்வேரு என்று அழைக்கப்படுகிறான்.

இவன் நாளடைவில் எஸ்தரை தனது ராணியாக்கிக்கொள்கிறான். இவளது செல்வாக்கினால் யூதர்கள் அழிக்கப்படாமல் தப்புவிக்கப்படுகிறார்கள்.

### அர்தசஷ்டா:

இவன் அகாஸ்வேருவின் குமாரனும் எஸ்தரின் வளர்ப்புமகனுமாவான்.

இவனது ஆட்சிக்காலம் சுமார் கிமு 465-423

எஸ்றா, நெகேமியா புத்தகங்கள் இவனது ஆட்சிக்காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம்.

## ஆலயம் மீண்டும் கட்டப்பட்ட காலவரிசை நிகழ்வுகள்

539- பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் (539-529) (எஸ்றா 1:1) பாபிலோனை கைப்பற்றினான் - பெர்சியாவை உலகப்பேரரசாக்கினான். பாபிலோன் பெர்சியாவினால் வீழ்த்தப்படும் என்று தானியேல் தீர்க்கதரிசனம் சொலிலியிருந்தார் (தானி 5:25-31)

538-கோரேஸ் ஆலயத்தை கட்ட உத்தரவு பிறப்பித்தல் (எஸ்றா 1:1-4) கோரேஸுக்கு 200 ஆண்டுகளுக்கு முன்பே யூதர்கள் கோரேஸின் காலத்தில் திரும்பிவந்து ஆலயத்தை மீண்டும் கட்டுவார்கள் எனபதை ஏசாயா சொல்லியிருந்தார்.(ஏசாயா 44:26-28:45:1,13)

536-செருபாபேல் 49,897 பேர்களோடு திரும்புதல் (எஸ்றா 2:2) செருபாபேல், பெர்சிய ராஜாக்களான கோரேஸ் அல்லது தரியுவின் காலங்களில் அல்லது இருவர்களின் காலத்திலும் அவர்களின் கீழ் ஆளுனராக இருந்தான். (ஆகாய்1:14,சகரியா4:9) பிரதான ஆசாரியனாக யோசுவா இருந்தான் (எஸ்றா2:2, ஆகாய்1:14) ஏழு மாதங்கள் பலிபீடத்தைகட்டி பலியிட்டுவந்தார்கள் (எஸ்றா 3:1-7)

529 - ராஜாவான கம்பீஸசோ (529-522) அல்லது எஸ்றா4:6ல் சொல்லப்படும் அகாஸ்வேருவோ அல்லது எஸ்றா 4:11-24ல் சொல்லப்படும் அர்தசஷ்டாவோ

535ல் ஆரம்பிக்கப்பட்ட ஆலயகட்டுமான பணியை நிறுத்த உத்தரவிட்டார்கள் (எஸ்றா 3:8-4:24)

521 - 1ம் தரியு (521-486) (மறுபெயர் ஹிஸ்டெஸ்பீஸ்) - ஆலயத்தை கட்டிமுடிக்க உத்தரவிட்டான்

(520) (எஸ்றா 6:1)

520-6வது மாதம் (செப்டெம்பர்) 1வது நாள் - ஆகாய் கட்டுவதற்கு அழைப்பு விடுத்தல்

6வது மாதம் (செப்டெம்பர்)24வது நாள் - கட்டுமான பணி ஆரம்பம் (ஆகாய் 1:13-15)

7வது மாதம்(அக்டோபர்)21வது நாள்- ஆகாயின் இரண்டாவது அழைப்பு (ஆகாய்2:1-9) 8வது மாதம் (நவம்பர்) சகரியாவின் ஆரம்ப உரை (சகரியா 1:1-6)

9வது மாதம்(டிசம்பர்) 24வது நாள் சகரியாவின் 3ம்.4ம்உரைகள் (சகரியா 2:10-23)
*11வது மாதம் (பிப்ரவரி) 24வது நாள்- சகரியாவின் தரிசனங்கள் (சகரியா)

518 9வது மாதம் (டிசம்பர்) 4வது நாள்-சகரியாவின் தரிசனங்கள் (சகரியா 7:1-14:21)

516 - 12வது மாதம்(மார்ச்) 3வது நாள் -ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது (எஸ்றா 6:15)

5151வது மாதம் (ஏப்ரல்) 14வது நாள் முதல் 21ம் நாள் வரை பஸ்கா (எஸ்றா 6:19-22)

486-1ம் செரக்சீஸ் (மறுபெயர்அகாஸ்வேரு )- கிரேக்கத்தின் மீது படையெடுத்தல்

எஸ்தர் பட்டத்துராணியாதல். இவளது திருமணத்தினால் யூதர்களுக்கு பெர்சிய அரசவைகூடங்களில் முக்கியத்துவம் கிடைத்ததோடு எஸ்றா திரும்பி வந்ததும், நெகேமியா உயர்த்தப்பட்டதும் நடந்தது (எஸ் 2:16) 478-474- எஸ்தரின் முயற்சியால் யூதர் தப்புதல் (எஸ் 3:10 முதல்) மொர்தெகாய் பிரதம அமைச்சராதல்

464-1ம் அர்தசஷ்டா (மறுபெயர் லோன்ஜிமானஸ்) (464424) இவன் எஸ்தரின் வளர்ப்பு மகன் (எஸ்றா 7:1)

457 1ம் அர்தசஷ்டா. எஸ்றா திரும்பிச்சென்று வழிபாடுகளை நடத்த உத்தரவிடுதல் (எஸ்றா 7:1-13)

யூதர்கள் செருபாபேல் தலைமையில் திரும்பிய 80 ஆண்டுகள் கழித எஸ்றா பரிலோனிலிருந்து 1754 பேரோடு

செல்லுதல் (எஸ்றா 7:7.9:8) யூதர்கள் மத்தியில் எஸ்றா மறுமலர்ச்சியை உண்டுபண்ணுதல் (எஸ்றா 10:10,11

(எஸ்றா 5:1,2: ஆகாய்!:1-11)

1. நிருப்பத்தை எழுதி அனுப்புதல் (எஸ்றா 4:6-24)

அஸ்திபாரம் போடப்பட்டு 21 ஆண்டுகளில் கட்டிமுடிக்கப்பட்டது

2 ஆண்டுகள் வேலை தொடர்ந்தது கிமு536-534

14 ஆண்டுகள் எதிர்ப்பினால் பணிகள் தடைபட்டது கிமு 534-520 கிமு 520ல் வேலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது .

5 ஆண்டுகள் கழித்து கிமு 515ல் ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டது

குறிப்பாக ஆலயத்தின் கட்டுமான பணிகள் 7 ஆண்டுகள் நடந்தன

எஸ்றா 5:1-2: தேவனுக்கு காத்திருந்து மீண்டும் ஆரம்பித்தார்கள் எஸ்றா 6:8-10 : ஆசீர்வாதமாய் மாறியது

2. பரிகசித்தாலும், சூழ்ச்சி செய்தலும் (நெகேமியா 4:1-24)

அவர்கள் ஜெபித்தார்கள்

அவர்கள் பாதுகாக்கப்பட்டார்கள்

3. பதவியையும், கட்டளையையும் துஷ்பிரயோகம் செய்தல் (எஸ்தர் 3:8-10)

உபவாசித்து காத்திருந்தார்கள்.